803

பதிவு எண்—M 5720　　வெள்ளிக் கிழமையில்　　குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை--7　　குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, ஆனி உச　　8—7—55　தளிர் 40

M.A.D.R.

## தொல்காப்பியச் சிறப்பு

தொல்காப் பியம்என்னும் தொன்மைப் பெருநூலின்
ஒல்காப் பெருஞ்சிறப்பை உய்த் துணரின்—அல்கா
தறிதோ றறியாமை ஆழ்ந்தகன் றோங்கித்
தொடுவானம் போற்செல்லும் சூழ்ந்து. (1)

பழமை பெருமைநூற் பண்பனைத்தும் வாய்ந்து
விழுமியர்கள் எல்லாம் வியப்ப—முழுமணியாய்ச்
செந்தமிழ்க்கே ஓர்சிறந்த தெய்வநூ லாய்விளங்கும்
நந்தமரும் தொல்காப் பியம் (2)

மொழிகள் பலப்பலதாம் மூதுலகில் உண்டு
ஒழிவில் இலக்கணமும் உண்டு-வழிமுறையே
என்றாலும், தொல்காப் பியம்போல் இலக்கணநூல்
ஒன்றேனும் இவ்வுலகத் தில். (3)

வழுத்துபெரு மாண்புடைய மற்றை மொழிகள்
எழுத்தினொடு சொல்லின் இலக்கணமே-முழுத்தும்
எடுத்துரைக்க மாட்டா திளைப்பப், பொருளும்
தொடுத்துரைக்கும் தொல்காப் பியம். (4)

எழுத்தொடுநற் சொல்லியல் பெல்லாம் இனிதே
முழுதும் விளக்கி மொழிந்து-விழுப்பமிகத்
“தள்ளாப் பொருளியல்பும்” சாற்றியதொல்
எள்ள ச்சீர் நூல், யாண்டும் இல்! [காப்பியம்போல் (5)

உயர்திணை அஃறிணை என்றிவ் வுலகை
மயர்வில் அறிவின் வளத்தாற்-செயிரற
நன்று பிரித்ததொடு, நல்ல அகம்புறம்
என்றுமிரு கூறுகண்டார் யார்? (6)

களவுநெறி கற்புநெறி கட்டுரைத்துள் ளத்தே
உளவாம்மெய்ப் பாடுவமை ஓர்வித்-தளவையிலாச்
செய்யுளியல் நன்மரபும் தேற்றினர்தொல் காப்பியனார்
வையமெங்கும் இல்லா வகை (7)

முதலும் கருவும் உரியுமென மூன்று
வகையால் உலகை வகுத்துத்-தகைமைமிகத்
தெய்வமுணா மாமரம் புள்பறையாழ் செய்திமக்கள்
மெய்யியல்பும் தேற்றினர்யார் வேறு? (8)

புலநெறி நல்வழக்காற் காதல் பொருந்தும்
தலைமக்கள் வாழுநெறி சாற்றி- உலகியலில்
“இன்பம் பொருளறன்கள்” என்பவெலாம்
மன்பதைக்குச் சொல்லினர்யார் மற்று? [எய்துமுறை (9)

இறை உயிரே அன்றி, உல கின்னியலும், நல்ல
துறவியலும் மற்றுமெலாம் சொல்லும்--முறையால்
இலக்கணநூல் நுட்பம் இறைநூற்கோள் வாய்ப்பக்
கலக்கமறச் சொற்றார்யார்? காண்! (10)

“உயிரிற் சிறந்தன்று நாணே, அந் நாணிற்
செயிர்தீர்காட் சிக்கற்புச் சீர்த்தென்”-பயல்தீரும்
தொல்காப் பியநூற்பாச் சூழ்ந்து, மணிமொழியார்
நல்காத விற்போற்றி னார்! (11)

‘வாழ்கநல் அந்தணர் வானவர் ஆனினம் [பொருட்பா
வீழ்கபுனல் வேந்தனுமிக் கோங்குகென்னும்” ஆழ்
ஞானசம் பந்தருமே நன்றுதொல் காப்பியநூல்
ஊனமின்றிப் போற்றலுணர்த் தும்! (12)

தேக்கு பெரும்புலமைச் செம்மலாம் நம்மருமைச்
சேக்கிழார் பெம்மான்,தம் தெய்வஅருள்—வாக்கினால்
நன்றே “அருந்தமிழ்” நூல் என்று நனிபுகழ்ந்த
தொலைறே, உதன்திறம்சாற் றும்! (13)

“நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்” என்னும்—குறள்மொழியால்
வள்ளுவரும் தொல்காப்பி யப்போற்றும் வாய்மையினைத்
தெள்ளிதிற் காணலாம் தேர்ந்து. (14)

ஐந்தினும்பல் லாயிரமாம் ஆண்டுகட்கு முன்பேயே
செந்தமிழில் அன்றிச் சிறந்துமிகும்—இந்தவகை
நாகரிகத் தெய்வநல நல்லறிவு நூல்களொன்றுண்
டாக, நினைப்பவும்யார்க் காம்? (15)

—புலவர் முருகவேள், B O L.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**7-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(8-10-54 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| மலர் | மன்மத, ஆனி, 8-7-55 வெள்ளி. | தளிர் |
|---|---|---|
| 7 | | 40 |


# தமிழர் சமயநெறி

(குன்றக்குடி அடிகளார்)

### தமிழர்:

காலத்தால் முன்னர்த் தோன்றி மூத்த இனம் தமிழினம் என்பது இன்றைய வரலாற்று ஆசிரியர்கள் முடிபு. உலகு முதலில் நெருப்பு, காற்று, நீர், கல், மண், உயிர்கள் ஆய முறையே தோன்றி வளர்ந்தது. இவ்வளர்ச்சி முறையில் கல் தோன்றி மண் தோன்றுவதற்கு முன்னே தோன்றி மூத்த குடி தமிழ்க்குடி, என்ற தமிழின் புறத்துறை இலக்கண நூல்— புறப்பொருள் வெண்பா மாலை— பேசுகிறது. இத் தமிழினம் வாழ்ந்த எல்லை விரிந்தும் பரந்தும் கிடந்தது. ஒரு காலத்துத் தமிழகத்து வட எல்லை இமயப் பனி மலை, தெற்கே குமரித்துறை, கிழக்கும் மேற்கும் கடல், என்று,

"தென் குமரி, வடபெருங்கல்,
குண குட கடலாவெல்லை"

ஒரு புலவர் பேசுகிறார். இப்புலவர் காலத்திற்கு முன் இன்றைய குமரித்துறைக்கு அப்பாலும் விரிந்த தமிழ் நிலம் இருந்ததாகச் சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். அப்பகுதிகளையெல்லாம் கடல் கொண்ட கண்டம்—லெமூரியா— என்று சரித்திரம் குறிப்பிடுகிறது. கடல் கொண்ட தமிழ் நிலத்தில் சரித்திரத்தை நுழைந்து ஆராய்ந்து பார்த்தால் கி. மு. 30,000-க்கும் அப்பாற்பட்ட பழமைக்குச் செல்லுகிறது, தமிழர் வாழ்வு தொடக்கத்தின் தொன்மை. இக்கடல் கொண்ட தமிழ் நிலத்திலே தமிழும் தமிழ் வளர்த்த சங்கங்களும் தமிழரசர் ஆட்சி முறையும் தமிழ்ச் சமயமாம் சைவ நெறியும் வளர்ந்திருந்தது என்று சரித்திரம் பேசுகிறது. இந்த நாகரிகத்தின் தொடர்ச்சியே சிந்து வெளி நாகரிகம். சிந்து வெளி நாகரிகத்தைப் பற்றி சர் ஜான் மார்ஷல் துரைமகனார் எழுதும்போது அந்த நாகரிகத்தை ஒரு முழு நிலை அடைந்த தனித் திராவிட நாகரிகம் என்று குறிப்பிடுகின்றார். தமிழரைத் திராவிடரென்றும், தமிழ் நாகரிகத்தைத் திராவிட நாகரிகம் என்றும் குறிப்பிடுகின்ற வழக்காறு மிகப் பிற்பட்டகாலத்தில்எழுந்தது ஆகும். எனவே திராவிடர் நாகரிகம் என்று வருவது தமிழ் நாகரிகமே ஆகும்.

### தமிழ் மொழி:

மனித சமுதாயம் கை அசைத்து—சைகை காட்டி வாழ்ந்த காலத்தில் பைய நாவசைத்தாள் தமிழன்னை என்று காந்தைக் கவியரசர் கூறுகிறார்.

மொழிநூல்வரலாற்று முறைப் படிக்கும் தமிழ்மொழி மிகத் தொன்மையான மொழியாகும். இத் தமிழ்மொழியே தென்னாட்டு மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி; இந்திய நாட்டின் மொழிகள் பலவற்றிற்குங்கூடத் தமிழே மூலமாகும். தமிழ்மொழி காலத்தால் மூத்த மொழி, முதுமொழி, இனிமைப் பண்புமிக்க மொழி, நெஞ்சோடு நெஞ்சாகக் கலந்து நிற்கும் நிறையுடைய மொழி, வழிகாட்டும் திருமறைகளும், வாழ்வு விளக்கும் இலக்கியங்களும், அளவிலா இன்பந்தரும் பல கலைகளும் பெற்றுப் பொலிவுடன் நின்றுலவும் ஒப்பற்ற ஒரு மொழி, அதுவே தமிழ்மொழி, நமது தாய்மொழியுமாகும்.

### மொழிவழி நாகரிகம்:

ஒரு மொழியும் அம்மொழியில் அமைந்துள்ள இலக்கியங்களும் வெறும் மொழி இலக்கியம் என்ற அளவோடு அமைந்து விடுவதில்லை. அம்மொழி பேசும் மக்களை நயக்கத்தக்க நாகரிக வாழ்வுப் பாதைக்கு அழைத்துச் செல்லும் சாதனமாகும். மேலும், பண்பட்ட வாழ்க்கையை விளக்கும் கருவியும் ஆகும். மக்கள் நாகரிகத்தைத் தெரிந்துகொள்வதற்குச் சாதனமாக அமைந்துள்ளது மொழியும் அம்மொழியின் இலக்கியங்களுமே ஆகும். தமிழ் மொழியும் அத்தகு பேரிலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. அவைகளுள்

பலவற்றைக் கடல் கொண்டுவிட்டது எஞ்சி நிற்பவை சங்க இலக்கியங்கள் என நாம் கொண்டாடும் பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும், பதினெண் கீழ்க் கணக்கு முதலிய இலக்கியங்களும் தொல்காப்பியம் என்ற இலக்கண நூலுமே ஆகும். தொல்காப்பியத்திற்கும் முந்திய அகத்தியத்தில் சில பகுதிகளே கிடைத்துள்ளன. இந்த இலக்கிய இலக்கணங்களைப் படிக்கின்ற பொழுது தமிழர் நாகரிகம் எவ்வளவு சிறப்புற்றோங்கி யிருந்தது என்று அறிந்துகொள்ள முடிகிறது. அன்பின் வழிநின்ற வாழ்வு, வாய்மை நெறி நின்ற ஒழுக்கம், ஈத்துவக்கும் இன்ப நுகர்ச்சி, புலனழுக்கற்ற வாழ்வு யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற விரிந்த நோக்கு, பிறவாமை தரும் பெருநெறி பற்றி நின்ற கொள்கை முதலிய இவை போல்வன தமிழர் நாகரிகத்திற் சிலவாம்.

இத் தமிழ் நாகரிகம் எகிப்தியர் சுமேரியர் ஆகிய நாகரிகங்களுக்குச் சமகாலத்ததாகவும், முன்னோடியாகவும் கூட இருந்திருக்க வேண்டும் என்று நம்புவதற்குரிய சான்றுகள் கிடைத்துள்ளன. மேலும் தமிழின் நாகரிகமே இன்றைய உலக நாகரிகத்திற்கும், பண்டைய உரோம, கிரேக்க, வட இந்திய நாகரிகங்கட்கும் முன்னோடியாய் இருக்கக் கூடும் என்று பழம்பொருள் ஆராய்ச்சிக்காரர்கள் கருதுகின்றனர். எனவே உலக நாகரிகம் பலவற்றிற்கும் தாய்மை நிலை பெற்றது தமிழ் நாகரிகமே ஆகும்.

பிறவா நெறி:

தமிழருக்கு மறு பிறப்புக்களிலும் வினைத் தொடர்ச்சியிலும் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. இதைச் சங்க இலக்கியங்களும் சிறப்பாகத் திருக்குறளும் தெளிவாக விளக்குகின்றன. தமிழர் பிறப்பிறப்புக்களால் விளைகின்ற இன்ப துன்ப நுகர்ச்சிகளுக்கு அஞ்சியவர்களாய் அதற்குக் காரணமாக இருக்கின்ற பிறப்பையும் கூடப் பேதைமை என்று குறிக்கலாயினர். மீண்டும் பிறவா நெறியே தமிழர் விரும்பியது. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்று திருவள்ளுவர் வேண்டுகின்றார். இப் பிறவாமையின்பாற்பட்ட வேட்கையும் வினை நீக்கத்தின் விளைவும் தமிழர்களைச் சிறந்த சமய வாழ்வுடையவர்களாக ஆக்கியது. தமிழ் மக்களது சமயம் இறை, உயிர், தளை என்ற மூன்று அடிப்படையில் தோன்றி வளர்ந்து விரிவடைந்துள்ளது. உயிர் இயல்பாகவே பாசத் தளையோடு பின்னிக் கிடக்கிறது. தளையினின்றும் விடுபெற்று, இயல்பாகவே பாசங்களினின்றும் விடுபெற்று இன்பப் பரம் பொருளாய் இலங்கும் சிவ பெருமானின் திருவடிகளைச் சார்தலின் மூலம் பிறப்பிறப்புக்களினின்றும் விடுபெற்று, வற்றாத முற்றாத திருவருள் இன்பத்தில் திளைத்து வாழ்கிறது. இதுவே நமது சைவ சித்தாந்தச் செந்நெறியின் விழுமிய கருப்பொருள். விரிப்பிற் பெருகும், தொகுப்பின் எஞ்சும்.

தமிழர் சமய நெறி:

தமிழினம் தமக்கென ஒரு சமய நெறி கொண்டு வாழ்ந்தது அதுவே சைவசித்தாந்த நெறி தமிழினத்தின் சமயப் பண்புகளைப் பற்றிப் பேராசிரியர் சுநிதிகுமார் சாட்டர்ஜி கூறுவது நம்முடைய நினைவிற்குரியதாகும். வினைப் பயன் பற்றிய கோட்பாடு, பிறப்பிறப்பு பற்றிய கொள்கை, சிவம், அன்னை, திருமால் ஆகிய தெய்வங்களை மையமாகக் கொண்ட ஆன்மீகக் கருத்துக்கள். தீ வேள்விக்கு மாறான வினை முறைகளை உடைய பூசை என்ற வழிபாட்டு முறை முதலியன தமிழர் வாழ்வினின்றே மற்றையவர்கள் மேற்கொண்டனர் என்பது. திருத் தந்தை ஹீராஸ் 'ஐரோப்பிய நாகரிகத்தின் இரு கூறுகளாகிய உலகியல் நாகரிகம் ஆன்மீக நாகரிகம் ஆகிய இரண்டிற்குமே மூல முதல் தமிழர் நாகரிகமே என்று இப்பொழுது அறியத் தொடங்கியுள்ளோம்' என்று கூறுகின்றார். சைவ சித்தாந்தக் கொள்கையானது தமிழரது பேரறிவின சிறந்த பயன் என்று போப் ஐயர் தமது திருவாசக மொழி பெயர்ப்பின் முகவுரையில் கூறியுள்ளார். இக்கருத்தைக் கனம் கவுடி என்னும் பாதிரியாரும் விரிவாக எடுத்து விளக்கியுள்ளார். அவர் சொல்லுவதாவது, 'சைவ சித்தாந்தக் கொள்கையானது தொன்மை நலம் பல அமையப் பெற்றது. இதுவே பழந் தமிழர்களின் சமய நெறியாகும் அணிபெற அமைந்த சமயமாகும்; நம்பிக்கைக்கும் நல்வாழ்க்கைக்கும் எடுத்துக் காட்டாக அமைந்த சமயம் ஆகும் இந்தியா முழுவதிலுங்கூட சைவ சித்தாந்தமே இந்தியர் நினைவின் சீர்மைக்கும் உயர்ந்த வாழ்க்கைக்கும் எல்லையாகும் பெருமை படைத்தது என்பதே இக்கருத்தையே தமிழ் மறைகள் சைவத்தின் மேற் சமயம் வேறில்லை என்றும் சைவ சித்தாந்தமே சித்தாந்தம் என்னும் தமிழர் நெறி முடிந்த முடிபு என்றும் சாற்றுகின்றன பிறமொழி நாகரிகக் கலப்பிற்கு முன்னர்த் தமிழர் கடவுட் கொள்கைக்குத் திருநெறி என்

றும் சிவநெறி என்றும் அருள் நெறி என்றும் பல பெயர்கள் வழங்கி வந்தன. திருநெறிய தமிழ் என்றும் நன்மை பெருகு அருள் நெறி என்றும் வரும் தெய்வத் திருமுறைகளின் வழக்கைக் காண்க. கடவுளுக்குச் சிறந்த தமிழ்ப் பெயராய் நன்மை, நேர்மை, தூய்மை, கருணை, செம்பொருள், இன்பம், மங்களம் என்ற பல பொருள் பயக்கும் சிவம் என்ற சொல் வடமொழிக் கலப்பிற்குப் பின் சைவம் என்றாயிற்று. எனவே தமிழர் வாழ்வோடு வாழ்வாகத் தொடங்கி—தோய்ந்து கிடந்து வளர்ந்து வாழும் சமய நெறி சிவநெறியேயாகும்.

## அகமும் புறமும்:

மனித இனத்தின் வாழ்வு, அகமும் புறமும் ஒருங்கியங்கி நினைக்கின்ற நினைப்பு செய்கின்ற செயல்களே நல்லின்பம் தருவனவாகவும் நிலைபேறுடையனவாயும் இருக்கும். அகமும் புறமும் ஒருங்கு இயையாதவைகள் சில கால அளவே நின்று குன்றவுடைத்தாய் இன்பமே நல்கும். சிற்சில போது இதனால் துன்பங்களும் விளைவதுண்டு. அதனால் அகத்திலே எழும் உணர்ச்சிகளைப் புறத் தோற்றத்திற்கும் பொறிகளின் நுகர்ச்சிக்கும் உரிய முறையில் ஒலி வடிவு, வரி வடிவு வண்ணமும் உறுப்புக்களும் பொருந்திய முழு உருவத் தோற்ற வடிவு முதலியவற்றிற்குக் கொண்டு வருகின்றனர். இது அகத்திலெழுந்த உணர்ச்சிகளை நிலை நிறுத்தி—நல்லின்பம் தொடர்ந்து அனுபவிப்பதற்காகப் புறத்தே ஆக்கிக் கொண்ட முறை. இம் முறை அமையாதாயின் பொறிகள் உலகியலில் ஆழ்ந்து காலப் போக்கில் அகத்தில் இருந்த நல்லுணர்ச்சியும் கெடுத்துவிடும். இம் முறையைக் கையாளுபவர்கள் தவம் நிறைந்த ஞானிகளும், அருட்கவிஞர்களும் ஆவர். இத்தகு முறையை அவர்கள் கையாண்டமையினால் அவர்கள் பெரும்பயன் அடைந்ததோடன்றிப் பின்னர்த் தம் வழி வரும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கும் ஒரு பேருதவியைச் செய்தவர்களானார்கள். உலகில் மிகச் சிலரே அகத்தில் வளர்த்துப் புறத்தேயும் படைக்கும் திறம் படைத்து நல்லருள் நிலை எய்துகிறவர்கள். பெரும்பான்மையோர் புறச் சாதனங்களினின்று அகத்தை வளர்ப்பவர்கள். ஆனால் அகமின்றிப் புறம் உருவாக முடியாது. சாலை போடுபவரின்றிச் சாலையும் இல்லை, சாலையின் மீது வழி நடப்போரும் இல்லை. ஒரு சிலர் சாலை அமைத்த பிறகு பல்லாயிரம் பேர் அச் சாலை வழி நடந்து ஊர் சென்றடைதல் இயல்பு. அது போலத் தவம் நிறைந்த தமிழ்ச் செல்வர்கள் சிலரால் இருளகற்றித் துன்பத்தின் தொடர் வறுத்து இன்பம் பெருக்கிப் பிறவா நெறி அளிக்கும் செம்பொருளினை நினைந்து நினைந்து வாழ்ந்தனர். அச் செம்பொருள் இப்படியன், இந்நிறத்தன், இவ் வண்ணத்தன் என்று எழுதிக் காட்ட முடியாததாக இருந்தாலும் தாம் அனுபவிப்பதற்காக நீக்கமற எங்கும் நிறைந்த அந்தப் பரிபூரணனுக்கு உள்ளக் கிழியில் உரு எழுதினர். எழுதத் துணை நின்றது அனுபவ வாழ்வு; அருளனுபவத்தின் திட்பமும் திறமையும் அதைச் சாதித்தது. உள்ளக்கிழியில் எழுதிய திருவுருவம் "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்—" என்ற அமுதத் தமிழில் ஒலிவரி வடிவுகளாய் வெளிப்போந்தது. இவ் வரி வடிவு அருளோடு கலையும் கொண்டு விளங்கிக் கலைஞர் கைத் திறனால் கண்கள் கண்டு களிக்கவும் தீண்டி இன்பம் நுகர்தற்குரிய முறைகளும் திருவுருவ வடிவமாக மலர்ந்தது. இதுவே திருவுருவ வழிபாட்டு முறையில் அமைந்து கிடக்கும் கொள்கையும் படிமுறை வளர்ச்சியும் ஆகும். இங்ஙனம் நமது வழிபாட்டு முறை வளர்ந்து பல்லாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. நமது சமயத் துறையில் இலிங்க வழிபாடு, பசுபதியாகிய சிவ வழிபாடு, அன்னை வழிபாடு ஆகியவை பதினாயிரக் கணக்கான ஆண்டுப் பழைமையும் உலகெங்கும் பரந்த பெருமையும் உடையனவாகும்.

## தமிழர் சமயமும் சமுதாயமும்:

தமிழர் சமய நெறி சமுதாயத்தோடு பின்னிக் கிடந்தது. இத்தகு மாட்சிமை மிக்க வாழ்வு சங்க காலத்திலும் அதற்கு முன்னரும் தமிழர்களிடையே பொருந்தியிருந்தது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதின் வழி மொழியே "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற திருமூலர் வாக்கு. பின்னர்ப் பிறமொழிச் சார்பினருடைய நுழைவொடு பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் பேதைமையும் நிறைந்தது. சாதி குலக் கோத்திரச் சண்டைகள் பெருகத் தலைப்பட்டன. இதனால் சமய வாழ்வில் குழப்பமும், சமுதாய வாழ்வில் வேற்றுமைகளும் வேறுபாடுகளும் இடம் பெற்றன. இந்த நிலையைக் கண்டு ஆற்றொணாத் துயருற்று இரங்கிய தமிழினத்தின் தவத்தால் தமிழ் மறை தந்த நால்வர் பெருமக்கள் தமிழகத்தில் தோன்றினர். அவர்கள் ஒரு மகத்தான

தமிழர் சமய மறுமலர்ச்சி இயக்கத்தைத் தொடங்கித் திறம்பட நடத்தி மாநில இயக்கமாக்கினர். தமிழர் சமயத்தைச் சிதைக்க முற்பட்ட பிறமொழி நுழைவு பிறப்பால் வேற்றுமைகள் ஆகிய இரண்டையும் களைய முயற்சித்தனர். அப் பேரியக்கத்தின் வழிநின்று வாழ்வதே இன்றைய தமிழகத்தின் சமயம். மேலும் அதே காலத்தில் சமுதாயத்தை விட்டு விலகிச் சமயம் தனியே போய்க்கொண்டிருந்தது. சமயம் சமுதாயத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பயன்படாத சடங்கு அளவோடு நின்று கொண்டிருந்தது. இம் மாபெருந் தவற்றினால் சமுதாயத்தில் வளமற்ற வாழ்வு காணப்பட்டது. இக் குறையை நிறைவாக்குவதே சமய வாழ்வு எனப் பல சமயச் சான்றோர்கள் வாழ்ந்து வழி காட்டத் தொடங்கினர். நடமாடுகின்ற மக்களினமும் தெய்வமே. அவர்களுக்குச் செய்வனவும் இறைவனுக்கேயாம் என்று எடுத்துக் கூறியதோடு செயலிலும் ஈடுபட்டனர். சித்தத்தைச் சிவன்பால் வைத்து வையகத்துள்ளோர் இன்பத்துடன் வாழ்வதற்குரிய மக்கட் பணிகளில் ஈடுபட்டனர். பசித்தவர்களுக்குச் சோறு போட்டனர். துணியற்றவர்களுக்குத் துணிகள் கொடுத்தனர். அழுக்குடை வெளுத்துக் கொடுத்துத் தூய்மையைக் காப்பாற்றினர். பொதுவாகத் தொண்டின் வழியது தூய சமய வாழ்வு என எடுத்துக் காட்டினர். இதனை நமக்குச் சேக்கிழார் அருளிச் செய்த பெரிய புராணம் நன்கு விளக்குகிறது. மக்கள் வாழ்வொடு வாழ்வாகப் பின்னி மக்கள் நலம் பேணும் கொள்கை உடையதொரு சமயம் உலகில் வேறொன்றில்லை என்றே துணிந்து கூறலாம்.

**இன்றைய நிலை:**

இன்றை நிலையில் தமிழர் தம் சமய வாழ்வில் இரண்டு பகுதியாகப் பிரிந்து நிற்கின்றனர். பழந் தமிழர் வழி வந்து சங்கச் சான்றோர்களும் நால்வர் பெருமக்களும் வளர்த்துக் கொடுத்த நெறியில் முழு ஈடுபாட்டுடன் நிற்பவர் ஒரு சிலரே, பெயரளவில் நிற்பவர்கள் பெரும் பகுதியினர். அவர்கள் தீண்டாமை, வழிபாட்டுத் துறைகளில் தெய்வத் தமிழ் இடம் பெறாமை, சமுதாயத்தின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு வேண்டிய நல்லறத் தொண்டுகளைச் செய்யாமை முதலிய குறைகளுடன் பெயரளவில் வாழ்கின்றனர்.

இன்னும் எண்ணிக்கையில் மிகச் சிலர் தமிழர் சமய நெறியை முழுதும் புரிந்து கொள்ள முடியாத நிலையில் மிகப் பிற்போக்கான இங்கர்சால் முதலிய நாஸ்திகவாதிகளுடைய வழியிலும் தமிழருக்குத் தொடர்பில்லாத நம்முடைய வாழ்வொடு பொருந்தாத வேறு பல சமயங்களை நல்லன என மாறுபட உணர்ந்து நாடுகின்றனர். இவர்கள் தமிழினத்தின் தன்மானத்தைச் சிதைக்கின்றனர் என்று வருத்தத்தோடு குறிப்பிட வேண்டியிருக்கிறது. இத்தகு நிலைகளைச் சிந்தித்துப் பார்க்கும் தமிழன்பர்கள் உடனடியாகப் பழந் தமிழர் நெறியாம் சிவ நெறியை மக்கள் மன்றத்தில் வளர்க்க முன் வருவார்கள் என்று நம்புகின்றோம்.

**நம் கடமைகள்?**

அவ்வப்பொழுது இனம், மொழி, நாகரிகம், அரசியல் படையெடுப்புக்களால் நம்முடைய தமிழ்ச் சமயத்தில் நுழைந்திருக்கின்ற கொள்கைகளில் தாழ்வில்லாத நன்மைகளைக் கைக்கொண்டு தமிழரின் அடிப்படைக் கொள்கைக்குப் புறம்பான சாதி சழக்கு நெறிகளைக் களைந்து நமது உயிரினும் இனிய சமயத்தினை வளர்க்க வேண்டும். மக்களினம் மொழி இவற்றை நடுநாயகமாக வைத்துக்கொண்டு நமது சமயத்தை வளர்க்க எல்லா வகையான பொதுப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். இத்தகு நோக்கத்துடன் தான் தமிழகத்தில் அருள் நெறித் திருக்கூட்டம் தொடங்கப் பெற்றுப் பேச்சு, எழுத்து, சமூகப் பணி, மாணவ மாணவி இல்லங்கள், கல்விச் சாலைகள் முதலிய பல துறைகளிலும் ஈடுபட்டுச் சேவை செய்து வருகிறது. இந்தப் புனித அருள் நெறித் தொண்டில் தமிழகத்தின் ஆதீனங்கள், மடங்கள், பல்கலைச் செல்வர்கள், பன்மொழிப் புலவர்கள், தேசியத் தொண்டர்கள், ஈடுபட்டுள்ளனர். மக்களும் ஒருமுகமாக நல்ல திட்டத்தோடு செயலில் ஈடுபட்டுச் செந்தமிழையும் சிவ நெறியையும் பேணி வளர்க்க வேண்டியது கடமை, தலையாய கடமையுமாகும்.

—'மணி மொழி.'

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

**COIMBATORE.**

# தல வழிபாட்டுச் சிறப்பு

1. தல வழிபாட்டில் தலம் தீர்த்தம் மூர்த்தி என்று மூன்று தன்மைகள் அடங்கியிருக்கின்றன. இடம், நீர், திருவுருவம் என்னும் அவை மூன்றிலும் படிந்து மக்கள் பயன்கொள்ளலாம்.

2. தலந்தோறும் இம் மூன்றின் இயல்புகள் வேறுபட்டிருக்கின்றன; அவ் வேறுபாடுகளில் படிந்து நலம் பெறுவதற்குத் தல யாத்திரை உதவியாயிருக்கிறது.

3. தலம் என்பது, திருக்கோயில் உள்ள இடமும் அதன் சூழலும் ஆகும். பழைய காலத்தில் நம் முன்னோர், அந்த இடத்தின் தனிச் சிறப்பால் இழுக்கப்பட்டு, மூல காரணனாகிய இறைவனை அங்கங்கே வழிபாடு செய்தனர். அந்தக் கவர்ச்சி இன்னும் இருக்கும்; ஓரளவாவது இருக்கும்; என்றும் இருக்கும்; அத்தகைய இடங்களில் பயில்வது சிறப்பு; இது 'தலத்தின்' தனிச் சிறப்பு!

4. ஒரு தலத்துக்குச் செல்வோர், அங்குள்ள நீரிலும் அது அங்கே தரும் உணவுப் பொருள்களிலும் இயைந்து அந்த நீருக்கு உரிய இயற்கை வன்மைகளை அடைகின்றனர். இது 'தீர்த்தத்தின்' தனிச் சிறப்பு!

5. இடம், நீர், என்னும் இரண்டின் வன்மைகளிலும் படிந்தவர்களுக்கு அவ் வன்மைகளை அவற்றிற்குத் தந்த ஓர் அறிவார்ந்த இயற்கை ஆற்றலின் மேல் எண்ணம் போகும். அப் பேராற்றல் மிக்க பேரறிவுப் பொருளையே 'கடவுள்' என்றறிந்து மூர்த்தியின் வாயிலாக மக்கள் வழிபடுகின்றனர். இடம் தீர்த்தம் என்பவற்றின் வேறு வேறு ஆற்றலுக்கு ஏற்றபடி இறைவன் ஆற்றலும் அங்கங்கே வேறுபட்டு நிற்கின்றது. பசுக்கள்தோறும் கறக்கப்படும் பால் ஒன்றுபோலத் தோற்றினாலும், உண்மையில், வெள்ளைப் பசுவின் பால் ஒரு வகையாகவும், கறுப்புப் பசுவின் பால் வேறொரு வகையாகவும், வேறு வேறு ஆற்றலுள்ளனவாய் இருக்கின்றன. அதுபோல இறைவனும் தலத்தின், தீர்த்தத்தின் வேறுபாட்டுக்கு ஏற்றபடி அங்கங்கே வேறுபட்ட மூர்த்தியாய் விளங்குகின்றனன். வேறு வேறு ஈடுபாடுண்டாக்கி வேறுபட்ட காட்சிகளுந் தந்து, அடியார்க்கு அருள்புரிகின்றனன். தலத்துக்கு ஒரு வகையாய் இப்படி வேறுபட்டு நிற்பதனால், திருப்பயணம் செய்வோர் தலந்தோறும் திருப்பயணம் செய்வது கட்டாயமாகின்றது. தல யாத்திரை செய்வோர் அவ்வச் சிறப்புக் காட்சியின் வேறுபாட்டியல்புகளில் படிந்து நலனுறும் வாய்ப்பும் உண்டாகின்றது இது 'மூர்த்தியின்' தனிச் சிறப்பு!

6. ஆனால் 'திருக்கோயில்' 'திருப்பயணம்' என்னும் நோக்கம் இல்லாமலே பொதுவாக வேறு வேறு இடங்களில் சென்று, வேறு, வேறு தீர்த்தங்களில் படிந்து வரலாம் என்றால் மூலகாரணம் தெரிந்து, மூலப் பொருளுடன் இணங்கி அதன் உதவியோடு அவைகளை நுகர்வோர்க்குத்தான் நன்றாய் அவற்றின் பயன் கிடைக்கும். தலைவன் வீட்டில் இல்லாத போது, அவன் அமைத்த வீட்டில் மக்கள் தகுதியான பயன் அடையமுடியுமா? வீட்டின் தலைவனும் இருந்து உரிய வரவேற்போடு நலங்கள் புரியும் பேறு தானே சிறப்புடையது. அப்போதுதானே அந்த வீட்டிலுள்ள பொருள்களின் நன்மைகளை நன்றாக நுகரமுடியும் அது போலத்தான், உலகத் தலைவனாகிய மூல காரணனது நினைவில்லாமலே வேடிக்கைக்காக, அல்லது வேறு நோக்கத்திற்காக ஊர்ப் பயணங்கள் செய்யும் போது அந்த (ஊர்) இடத்தினை, அங்கு உள்ள நீரின், நலங்களை எப்படி நிறைவாக அடையமுடியும்?

7 அதனாலேதான் 'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு ஒரு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும்" என்று குருவடிவில் அந்த மூல காரணன் வெளிப்பட்டு வருதலை நம் தாயுமான அடிகள் நமக்கு நினைப்பூட்டினார் ஆதலால் இறை நினைவு இல்லாமல் உலக நலங்களில் எவ்வளவுதான் இயக்கமும் அரசியலும் நடத்தி, தொழில்களும் பொருள்களும் பெருக்கி, ஏனைய நாடுகளுக்குமேல் உயர்ந்து சிறந்தாலும் அச் சிறப்பு அரைகுறைச் சிறப்பென்றே நம் முன்னோர்கள் நமக்கு அறிவுறுத்தினார்கள்.

8. அப்படி குருவடிவில் வரும் ஆண்டவன் அந்த அந்த ஊரின் திருக்கோயிலில் மரங்களின் கீழே (தல விருட்சத்தின் கீழே) பெரும்பாலும் வெளிப்படுவார் மணிவாசகப் பெருமானுக்கு வெட்டவெளியில் வெளிப்படாமல் குருந்த மரம் என்னும் ஒரு தருவாத்தின் நிழலில் எதிர்ப்பட்டுக் குருவடிவில் அருள் புரிந்ததை நினைவு கூர

லாம். அப்படியே திருக்கோயில்கள்தோறும் பெரும்பாலும் ஒவ்வொரு மரம், திருக்கோயில் மரம் என்று பாராட்டப்பட்டு வருதலை, போற்றப்பட்டுவருதலை, இன்றும் காணலாம். அதனால் திருக்கோயில் வழிபாடு செய்வோர் திருக்கோயில்மரங்களின் கீழேயும் அமர்ந்திருந்து அருளை உள்குவது நல்லது அரசமரத்தின் காற்றுத் தெளிந்த உணர்வுக்கும், வேப்ப மரத்தின் காற்று உடம்பின் நலத்திற்கும் ஏற்றவை என்பதை எளிய பொது மக்களும் இனிது அறிவர். அப்படியே கோயில்கள் தோறும் சென்று சென்று, அங்கங்கும் உள்ள, இடச் சிறப்பு நீர்ச் சிறப்புகளால் உண்டான செடி கொடிகளையும் மரங்களையும் பயன் கொள்ளுவது அறிவுடைமை அன்று என்று சொல்லமுடியுமா? திருப்பெருந்துறையிலுள்ள குருந்த மரத்தின் சிறப்பும், திருவாவடுதுறையிலுள்ள அரசமரத்தின் சிறப்பும், திருக்கழுக்குன்றத்திலுள்ள சஞ்சீவி மலைச் செடி கொடிகளின் சிறப்பும், வேறு வேறு இடங்களிலுள்ள அவ்வச் செடி கொடிகளுக்கே வருமா? கத்தரிக்காயில் ஆத்தூர் கத்தரிக்காயும், அயலூர்க் கத்தரிக்காய்களும், ஒரே பயன் தருபவையா? நீலகிரி மிளகாயும், நீர் நாட்டு மிளகாயும் ஒன்றுதாமா? அவை போல ஒரே வகையான மரம் வேறு வேறு தலங்களில் இருக்கும்போதும், பலன் எப்படி ஒரே வகையாக இருக்கமுடியும்? அரசமரங்களைத் திருக்கோயில் மரங்களாகக் கொண்ட வேறு வேறு இடங்கள், அரசமரப் பயனையே, வேறு வேறாகத் தானே தரும்.

9. திருப் பயணங்களால் தக்கபடி பயன் கொள்ளுவது, அவரவர் உணர்ச்சி நலத்தையும் பொறுத்தது. ஆதலால், உண்மையும், உருக்கமும் இல்லாதவர்க்கு ஊர் சுற்றுதல் அவ்வளவாக நற்பயன் உண்டாக்காது.

10. மேலும், உணர்ச்சி நலம் உடையவர்கள் ஓர் இடத்திற்குச் சென்றுவந்தாலும் அவ்வூர்ப் புனலின் மனங் கனிந்து ஆடினாலும் ஊர்ச் சிறப்பு மேலும் மிகுதிப்படுகின்றது. அவ் வழியில் நின்று, பின்னுள்ளோர் பொருந்திய வழிபாடுகள் செய்து வருவதனால் இன்னும் அந்த இடத்தின் நலம் மிகுதிப்படும். அதனாலேதான் கோயில் வழிபாடுகள் முட்டுப்பட்டால் உலக நலங்கள் குறையும் என்று அறிவார்ந்த திருமூலதேவர் அறிவுறுத்துகிறார். நால்வர்களால் பாடப்பட்ட திருத்தளிகளும், ஆழ்வார்களால் துதிக்கப்பட்ட திருப்பதிகளும் மற்றவற்றைவிடச் சிறப்புடையனவென்று அதனால் மதிக்கப்படுகின்றன, எல்லாக் கொள்கையினரும் அவரவர் குருமார் தோன்றிய இடங்களையும், அருள்பெற்ற இடங்களையும் துறவுபெற்ற இடங்களையும் கண்போலப் போற்றிவருவது கண்கொள்ளாக் காட்சியாயிருக்கிறது.

11. இப்படிப்பட்ட ஆழ்ந்தமைந்த கருத்துள்ளதனால், திருக்கோயில் திருப்பயணம் மேன்மேலும் அங்கங்கே செல்லும் போது புதிய புதிய அழகிய கருத்துண்மைகள் மலர்வதற்கும் ஏதுவாய் இருக்கிறது. திருக் கயிலையிலிருந்து தென்னாட்டிற்கு வந்த திருமூலர்க்கு, அதற்குமுன் பல தலங்களில் அவர்கள் படிந்துவந்தாலும், திருவாவடுதுறை என்னும் இடத்திற்கு வந்தபோதுதான் திருமந்திரம் நூல் உருவாய் எழுந்தது. அப்படி மாறுதல் கொண்ட இடச் சிறப்புகளால், புதிய புதிய கருத்துக்கள் உருவாகின்றன. அதனாலேதான் இறைவனை உள்குவதிலும் வேறுவேறுஇடங்களில் அமர்ந்து உள்குதல்தக்கவகையில் வளர்ச்சிமுகங் கொள்கின்றது. சுந்தரமூர்த்தி நாயனார்க்கு அவர் பிறந்த ஊராகிய திருநாவலூரில் தோன்றாத பாடல், திருவெண்ணெய்நல்லூரில்மட்டும் தோன்றியதை இங்கு நினைவுகூரலாம்.

12. ஒளி உடம்புகளிலுள்ள தேவரும், தசை உடம்பிலுள்ள முனிவரும், அரசரும், வீராதி வீரரும், பெண்டிரும், சிற்றுயிர்களுங்கூட வழிபட்ட சிறப்பு, கோயில்கள்தோறும் வேறுபட்டுத் தெரிகிறது. வழிபட்டோர் பெயராலும், இறைவன் பெயராலும், அமைப்புகளின் பெயர்களாலும், ஊர்ப் பெயர்கள் அமைகின்றன. அவரவரும் தம் நலங்கருதியும், பிறர் நலம் கருதியும் வழிபட்டிருக்கிறார்கள். திருக்கொண்டீச்சுரம் என்பது இறைவனால் பெயர் பெற்றது. ஈச்சுரன் இருக்கும் ஊர் ஈச்சுரம் என்று பெயர் பெற்றது. இவற்றில் தன்னலம் கருதாமல் பிறர் நலத்திற்கு இறை நிலையையே எண்ணிச் செய்த வழிபாடு மற்றவைகளைவிட, உயர்ந்த நோக்கம் கொண்டது. ஆதலால் இறைவன் பெயரால் அமைந்த திருப்பெயர்கள் எவ்வளவோ சிறந்த நலங்களை நமக்கு மிகுக்

கும் என்பதைத் தெளிவாய்த் துணியலாம்.

13. அம்பிகையே இறைவழிபாடு நிகழ்த்தி இறைவன் பெயரால் திருவேகம்பம் என்னும் திருப்பெயர் அமைந்துள்ளது அது, மேலும் பெரும்பயன் விளைவிப்பதாய் இருக்கிறது.

14. பெரியோர் வழிப்பட்ட தலம், நாமும் வழிபட உதவும்; பாடல்பெற்ற தலங்கள் அத்தகையவை அவற்றை வழிபடுவது மாட்சிமையாயிருக்கிறது.

15. வழிபாடு செய்வதுமட்டுமன்றி அவரவரும் தத்தம் வாக்குகளால் பாடல் இயற்றி இருப்பது நமக்கு வழிபாட்டின் எளிமைக்கும் பெரும் பயனுக்கும் ஏதுவாயிருக்கிறது அவை, எங்கும் நிறைந்து எல்லாவற்றிலும் ஊடுருவியிருக்கும் இறைவனை எளிதாக நம் உணர்வில் இறக்கிப் பதிக்கின்றது.

ஏனென்றால், ஓசைகள், ஆகாசத்தின் செய்கைகள்; பொருள் ஒலிகள், இன்னும் எத்தனையோ நுட்பமாய்ச் சத்திதத்துவம் என்னும் மிக நுண்ணிய இடத்திலிருந்து இயங்கி வான் ஓசையிற் கலந்து மறைவாக்குகளாய் வெளிப்படுகின்றன.

அதனால் அவை மண்ணின் செயல்கள், நீரின் செயல்கள், தீயின் செயல்கள், காற்றின் செயல்கள் என்னும் நான்கின் செயல்களுக்கு மேற்பட்ட வானின் செயல்களான ஓசைகளுடன் போற்றப்பட்டுத் தோற்றுதலால், பாடல்கள், நாம் இருக்கும் பூதப்பகுதியில் இறைவனை உணர்வதற்கு முதல் முதலில் ஒலிப்பாடல் இன்றியமையாததாய் உள்ளது

"பாடலுக்கு இரங்குவோன்" "தமிழால் பாடினேன் படுதுயர் களையாய்" என்றெல்லாம் பெரியோர்கள் இப் பண்பை எடுத்துக் காட்டினார்கள்.

16 மனத்தால் நினைக்கும் போது வாக்கும் செயலும் ஈடுபட்டு நின்றால், எளிமையும் இனிமையும் பெருகக் காண்கிறோம். மனம் ஒன்று நினைக்க, வாய் ஒன்று பேச, செயல் ஒன்று செய்ய, அவை மூன்றும் ஒற்றுமைப் படாமையால் நேர்படாமையால் அம் மூன்றின் செயலும், அம் மூன்று கருவிகளும் ஆற்றல் அழிந்துபோகின்றன அதனால் அப்படிப்பட்டவர்கள் வாக்கு, கருதிய பயனையும் இழந்துவிடுகின்றது. தேவார திருவாசகங்கள் இயற்றிய பெரியோர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்லர். ஒரு நெறிய மனம் வைத்து வாக்கும் செயலும் நேர்பட நின்றவர்கள்.

"ஐந்துபே ரறிவும்
கண்களே கொள்ள,
அளப்பருங் கரணங்கள்
நான்கும்
சிந்தையே யாக,
குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்து விகமேயாக
இந்துவாழ் சடையான்
ஆடும் ஆனந்த எல்லையில்
தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப
வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின்
மலர்ந்தார்"

என்று தில்லையில் சுந்தரர்க்கு நேர்ந்த அருள் நிலைப்பைக் கூறும் சேக்கிழார் பாடல், மனம் வாக்கு காயம் நேர்படநிற்றற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

அத்தகைய ஆற்றலுடன் பாடிய பாடல்கள் பின்னுள்ளோர்க்கு எவ்வளவு பெரும் பயன் அளிக்கும், பாடல் பெற்ற தலங்களின் சிறப்பு இதனால் எவ்வளவு மாட்சிமையாய் இருக்கிறது!

—o—

Phone 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்

ELEPHANT KISAN

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)